**செய்தி வெளியீடு எண் : 438** **நாள்: 19.03.2022**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள்.அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்று 19.03.2022 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில், சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.ப.பத்மா அவர்கள் உரையாற்றும் போது, மகாகவி பாரதியார் அவர்கள் சுதந்திரம், தேசப்பற்று, பெண் விடுதலை போன்ற தலைப்புகளில் கவிதைகளை எழுதியுள்ளார். அதனால்தான் அவர் நூறு ஆண்டுகள் கடந்தும் போற்றப்படுகிறார். அன்னாரின் புகழை போற்றும் வகையில் இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று உரையாற்றினார்.

மேலும் சென்னை, அரசு முஸ்லிம் ஹோபாட் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், சென்னை, நுங்கம்பாக்கம்,அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின், மகாகவி பாரதியாரின் கவிதைகள், பாடல்கள் மற்றும் குழுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.எம்.திவாகர் அவர்கள் வரவேற்று பேசினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை அவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.எஸ்.ரமேஷ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**